# புகழ்ச்சிக் கூட்ட நற்செய்தி

2018 ஐப்பசி மாதம் 01ம் திகதி முதல் 06ம் திகதி வரை

## *மனச்சாட்சியின் அத்திவாரம் இறைஅபிப்ராயமாக*

01. ஆரம்பப் புகழ்ச்சி புபுது பாடல் இல 05 ‘‘ஞானம் வீரம் சக்தி…..’’
02. புகழ்ச்சிக்கான அறிமுகம்

முறை இரகசியமான விதத்திலும் அழகாகவும் மனிதனைப் படைக்கையில் இறைவனின் எல்லையற்ற அன்பு அதன் மீது வெளிப்பட்ட விதம் புதுமையானது. திருப்பாடல் பாடலாசிரியர் 139வது பாடல் மூலம் மிகவும் தெளிவாகவும் அலங்காரமாகவும் அதனை முன்வைத்த, இறைவன் மனிதனுக்கு காட்டுகின்ற அன்பு மிகவும் விசாலமானது என்பதனை வெளிப்படுத்தியவாறேயாகும்.

திருப்பாடல் 139வது பாடலை தியானித்தவாறு புகழ்ச்சிக்கு உள்ளாகுவோம்.

புபுது பாடல் இல 129 ‘பூர்ணமாணவரே…..’

03. நாளுக்குரிய நற்செய்தி மனச்சாட்சியின் அத்திவாரம் இறைஅபிப்ராயமாக….

- கிறிஸ்தவ நற்செயல்பாடுகளால் முழுமையாக நிரம்பிய மனச்சாட்சியின் செயல்பாடு உண்மையானதா என்பது சிலருக்கு கேள்விக் குறியாக இருக்கலாம். உண்மையான விதத்தில் எம்மால் பதில் கொடுக்க முடியும். கிறிஸ்து ஆண்டவரின் மனச்சாட்சி அவ்வாறு பரம முன்மாதிரிகையானதாகும். கிறிஸ்து ஆண்டவரின் முழுவாழ்வுமே கழிந்தது இறைவிருப்பத்தை நிறைவேற்றுகின்ற தாகத்துடனேயாகும். இதனை அவரது மனச்சாட்சியின் பிரதான இலட்சணமாக நாம் கவனத்தில் கொள்ளலாம்.
- புதிய ஏற்பாட்டில் நற்செய்தியாளர்கள் கிறிஸ்து ஆண்டவரின் இறை விருப்பத்திற்கு கீழ்படிந்த நிகழ்வுகள் அநேகமானவற்றை பதித்துள்ளார்கள். அவ்வாறான அனைத்து நிகழ்வினுள்ளும் கிறிஸ்து ஆண்டவரின் மனச்சாட்சி செயல்பட்ட விதத்தை எம்மால் காண முடிகிறது.

உதாரணம் புனித லூக்கா 6:12 (சீடர்களைத் தேர்ந்தெடுக்கையில்)

புனித மாற்கு 14:36 (பாடுபடுதலிலும் மரணவேதனையிலும் இறைவிருப்பத்தை தெரிந்து கொண்ட இயேசு ஆண்டவரின் செபமானது ‘‘எனது விருப்பமல்ல உமது விருப்பம் நிறைவேறட்டும்’’ என்பதாகவே)

புனித மத்தேயு 6:10 (சீடர்களுக்கு செபம் செய்யக் கற்றுக்கொடுத்தவாறு வெளிப்படுத்தியதும் ‘‘உமது விருப்பம் நிறைவேறுக’’ என்றேயாகும்.)

- எமது மனச்சாட்சியின் அத்திவாரமும் இறை அபிப்ராயத்தை நிறைவேற்றுவதாகவே இருக்க வேண்டும்.
- இறை அபிப்ராயத்தை திருப்பலியில், திருவருட்சாதனங்களில், இறைவார்த்தையில் மற்றும் தனிப்பட்ட பொது செப வழிபாடுகளில் தேடுவதும் நிறைவேற்றுவதும் அவசியமாகும்.

04. கலந்துரையாடலுக்காக (அருகிலிருப்பவருடன் பகிர்ந்து கொள்ளவும்)

- உண்மையான மனச்சாட்சியின் பலம் அடுத்தவர்களது வாழ்விற்கு நலத்தை விடுதலையை மீட்பினை வெற்றியை கொடுக்கக்கூடிய ஆசீர்வாதம் என்று கிறிஸ்து ஆண்டவரின் வாழ்வினைப் பார்க்கையில் தெளிவாகிறது.
- நாம் பெற்றுள்ள புத்திரத்தன்மையின் அழைப்பினூடாக உண்மையான மனச்சாட்சியுடன் வாழ்ந்து சாட்சி பகர்ந்திடும் அழைப்பு எமக்கு கிடைத்துள்ளது. உங்கள் சாட்சி பகர்தலைக் குறித்து உங்களால் திருப்தி அடைய முடியுமா?

05. செயல்பாட்டிற்காக

வாரம் முழுவதும் திருப்பலி, பாவமன்னிப்பு அருட்சாதனம் பெறல், இறை வார்த்தையை வாசித்தல் போன்றவற்றை முதன்மையாக கொள்வோம்.

06. இறுதிப் புகழ்ச்சி

புபுது பாடல் இல 314 “உமது விருப்பத்தை…..”